# இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

## பதவி வெற்றிடங்கள்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் கீழ்வரும் பதவிகளுக்கு பொருத்தமான தகைமையுள்ள நபர்களிடமிருந்து **04.12.2018** வரை விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும்.

**1. பட்டதாரி மொழிபெயர்ப்பாளர் தரம் II சிங்களம் - ஆங்கிலம்**

**<u>தகுதிகள்</u>**

1 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து சிங்களம் ஒரு பாடமாகக் கொண்ட ஒரு பட்டம்

மற்றும்

க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழி அல்லது இலக்கியத்தில் திறமைச் சித்தி அல்லது க.பொ.த. (உ/த) பரீட்சையில் அல்லது உயர் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் சித்திபெற்றிருத்தல்.

2 ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி மற்றும் அல்லது மும்மொழியிலும் தேர்ச்சியுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**2. பட்டதாரி மொழிபெயர்ப்பாளர் தரம் II தமிழ் - ஆங்கிலம்**

**<u>தகுதிகள்</u>**

1 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து தமிழ் ஒரு பாடமாகக் கொண்ட ஒரு பட்டம்

மற்றும்

க.பொ.த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழி அல்லது இலக்கியத்தில் திறமைச் சித்தி அல்லது க.பொ.த. (உ/த) பரீட்சையில் அல்லது உயர் பரீட்சையில் ஆங்கில மொழி மூலம் சித்திபெற்றிருத்தல்.

2 ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி மற்றும் அல்லது மும்மொழியிலும் தேர்ச்சியுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**சம்பள அளவுத்திட்டம் :** U-MN 3(II) as at 01.01.2020 - Rs. 42,885 – 18 x 660 – 54765 pm.

மேற்படி சம்பளத் திட்டத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

வயது – 45 ஆண்டுகளுக்கு மேற்படாமல்.

(பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, உயர் கல்வி நிறுவனங்கள், அரச திணைக்களங்கள், பொதுக்கூட்டுத் தாபனங்கள், நியதிச் சபைகள் ஆகியவற்றில் சேவை புரிவோருக்கு வயதெல்லை ஏற்புடையதல்ல.)

தேர்வுமுறை : சோதனை மற்றும் நேர்முகப்பரீட்சை மூலம் தேர்வு நடைபெறும்

**அனுகூலங்கள்**

- தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தின் 10% பல்கலைக்கழக ஊழியர் சேம இலாப நிதியத்திற்கு செலுத்துதல் வேண்டும் அதே வேளை தொழில் வழங்குனர் உத்தியோகத்தர்களின் மாதாந்த சம்பளத்தின் 15% வீதத்தினை அவர்களின் கணக்கில் வைப்பிலிடுவர் அதில் 8% பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்திற்கும் 7% பல்கலைக்ககழக ஊழியர் சேம இலாப நிதியத்திற்கும் செல்லுத்தப்படும். இதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு பல்கலைக்கழகம் அவரது மாதாந்த சம்பளத்தின் 3% தொகையினை பங்களிப்புச்செய்யும்.

**விண்ணப்பங்களும் ஏனைய விபரங்களும்**

விண்ணப்பப்படிவம், தேவையான தகைமைகள் மற்றும் அது தொடர்பான தகவல்களை பல்கலைக்கழகத்தின் **www.seu.ac.lk** என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். விருப்பமான நபர்கள் பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து தரவிறக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து ரூபா. 200.00 செலுத்திய பற்றுச் சீட்டினை இணைத்து அனுப்புதல் வேண்டும். இக் கட்டணத்தினை மக்கள் வங்கியின் அட்டாளைச்சேனை கிளையிலுள்ள **228-1001-9000-1704** எனும் இலக்கம் கொண்ட இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கணக்கிற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்படிவங்கள் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத்தபாலில் **பதிவாளர், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக பூங்கா ஒலுவில் - 32360** எனும் முகவரிக்கு **04.12.2018** ம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் கடித உறையின் இடதுபக்க மூலையில் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தங்களது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரூடாக அனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படாத விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

பூரணமற்ற, தெளிவில்லாத மற்றும் விண்ணப்ப முடிவு திகதிக்கு பிறகு பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளை நேர்முகப்பரீட்சைக்கு பட்டியல் படுத்தும் உரிமையை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் தன்வசம் வைத்துள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு பட்டியல் படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

பதிவாளர்
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக பூங்கா
ஒலுவில் - 32360
30.10.2018